நேரத்தையும், காலத்தையும் செலவு பண்ணவேண்டியதில்லை என்ற காரணத்திற்காக, சம்பந்தப்பட்டவர்களுக்கு--அந்த மணிவாசகர் அச்சகத்திற்கும் பொரி-கடலை உற்பத்தியாளர் முன்னேற்ற சங்கத்திற்கும்—அவர்கள் அவையின் உரிமைகளை மீறியுள்ளார்கள் என்பதைக் குறித்து நான் எச்சரிக்கைசெய்து எழுதுவதாக இருக்கிறேன். அதுவே போதும் என்று கருதுகிறேன். ஏனென்றால், 'De Minimus Non Curat Lex' என்ற கொள்கைக்கு இணங்க, இந்த மாதிரிச் சிறிய காரியங்களைச் சட்டம், சட்டப் பேரவை பொருட்படுத்தக்கூடாது.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: அதை முழுவதும் படித்து விட்டால், அது எப்படி நடந்திருக்கிறது என்பது தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: படிக்கவேண்டாம், நன்றாக இருக்காது.

திரு. பி. வேலுசாமி: இந்தச் சிறிய காரியங்களை வளர விட்டாலும் ரொம்பவும் அதிகமாகப் போய்விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த முறை எச்சரித்து விடலாம். எத்தனையோ துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப் படுகின்றன. பேரவையின் விலை மதிக்க முடியாத நேரத்தையும், காலத்தையும் இப்படிப்பட்ட காரியங்களில் செலவழிக்கக்கூடாது என்பது என் கருத்து மட்டுமல்ல, நடைமுறையும் அதுவேயாகும்.

(vii) தலைமைச் செயலகத்திற்கு வருகிறவர்களைக் கட்டுப்படுத்த வெளியிடப்பட்டுள்ள தலைமைச் செயலாளரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் அரசாங்கத் தலைமைச் செயலாளர் (சீஃப் செகரடரி டு கவர்ன்மெண்டு) வெளியிட்ட அறிக்கை இங்கே உள்ளே வருகிறவர்களுக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்திருப்பதால் பேரவையின் உரிமையையும், பேரவைத் தலைவரின் உரிமையையும் மீறியிருப்பதாக எழுதியிருக்கிறார். அதை முற்றிலும் வாசித்துப் பார்த்த பிறகு, பேரவைத் தலைவருடைய அதிகார வரம்பிற்குள் தலைமைச் செயலாளர் பிரவேசிக்க இல்லை. அதில் எந்தவிதமான அவை உரிமைக் கேள்வியும் இல்லை. No *prima facie* case has been made out என்று தீர்ப்புச் சொல்கிறேன்.

(viii) பேரவைத் தலைவர்பற்றி ஒரு பத்திரிகையில் வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, நண்பர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் ஒரு பத்திரிகையில் பேரவைத் தலைமையைப்பற்றி ஏதோ எழுதியிருப்பதாகவும், அது உரிமைப் பிரச்சினையின்கீழ் வருவதாகவும் எழுதியிருக்கிறார். அதைத் தள்ளுபடி செய்வதா, இல்லையா என்பதுகூட நான் சொல்ல முடியாது. என்னைப்பற்றி ஏதோ தாக்குறைவாக எழுதியிருக்

கிறார்கள் என்று சொல்கிறார்கள். பேரவைத் துணைத் தலைவர் பின்னால் இதுபற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்று சொல்லி அதைத் தள்ளி வைத்துவிடுகிறேன்.

(ix) செய்தித் துறை அமைச்சர்மீதான அவையுரிமைக் கேள்வி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்தாற்போல், திரு. கோ. பூவராகன் அவர்கள் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் மீது ஒரு அவை உரிமைக் கேள்வி கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், அதில் எழுதியிருக்கும்படியான வாசகம் இந்தப் பேரவையில் சொல்லக்கூடிய வாசகமாக இல்லாத காரணத்தினால், அதை நான் என்னுடைய அறையிலேயே தள்ளுபடி செய்து விட்டதாக இங்கே அறிவிக்கிறேன்.

(x) பேரவைத் தலைவர்மீதான அவையுரிமைக் கேள்வி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் என்மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். பேரவைத் தலைவர்மீது உரிமைப் பிரச்னை கொண்டு வருவது எங்கும், எந்த நாட்டிலும் கேள்விப்படாத ஒன்று. அதனுடைய முற்பகுதி பூராவும் என்மீது சொல்லப்படுவதாக இருக்கிறது. ஏதோ சில சில நேரங்களில் நான் அவர்களுக்கு நேரம் கொடுக்கவில்லை, எனவே அது அவை உரிமையை மீறியதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து என்மீது குற்றங்குறை சொல்வதாக இருந்தால், இந்தப் பேரவையிலே சொல்ல முடியாது. ஏனென்றால் இந்தப் பேரவையில் எனக்கு விவாதம் செய்ய உரிமை கிடையாது. ஆகையினால், விதிகளின்படி நீங்கள் என்மீது ஏதாவது சொல்லவேண்டுமென்றால், உரிமைக் குழுவிடம் சொல்லி, அவர்கள் அதற்கு தீர்ப்புச் சொல்லவேண்டும். நீங்கள் நன்றாக ஆராய்ந்து பார்த்து, என்ன செய்யவேண்டும் என்று முடிவு செய்வதற்காக வேண்டி உங்களுக்கு அவகாசம் கொடுக்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I withdraw the Privilege Motion given notice of against the Hon. Speaker.

(2) நடைமுறைக் கேள்வி—தொடர்ச்சி

(ii) நீதி விசாரணையிலிருக்கும் பொருள் குறித்து ஆற்றப்படும் உரையின் வரையறைகள்

DR. H. V. HANDE : Now I want to raise a point of order. I would like to get some clarification with regard to the rules of the Assembly. Rule 31 relates to questions and Rule 67 relates to speeches.

MR. SPEAKER : Rule 67 is with regard to speeches and Rule 68 is with regard to motions.

DR. H. V. HANDE : I am saying that Rule 31 is with regard to questions and Rule 67 is with regard to speeches. Rule 31 precludes us from raising matters on which a judicial